ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2278/19 - 2022 මැයි මස 05 වැනි බ්‍රහස්පතින්දා - 2022.05.05

*2278/19 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு மே மாதம் 05 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**கொழும்பு மாநகர சபை**

கொழும்பு மாநகர சபையின் ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிச் சட்டம்

*2021*, செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி நடாத்தப்பட்ட கொழும்பு மாநகர சபையின் மாதாந்த பொதுச்சபைக் கூட்டத்தின் போது தீர்மான இலக்கம் 2445 இன் கீழ் நிறைவேற்றப்பட்ட கொழும்பு மாநகர சபையின் 2021, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி அறிவிக்கப்பட்ட இலக்கம் 2245/30 என்ற அதிவிசேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்ட பிரிவுகளில் சில பிழைகள் காணப்பட்டமையால் அவை பின்வருமாறு திருத்தப்படல் வேண்டும் என இத்தால் அறிவுறுத்தப்படுகின்றது.

**ரோசி சேனாநாயக்க,**
மாநகர முதல்வர்,
கொழும்பு மாநகர சபை.

கொழும்பு மாநகர சபை,
*2022*, மே *04*.

**திட்ட வரைவு பிரேரணை**

"*1952* ஆம் ஆண்டின் 06ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (ஏற்றுக்கொள்ளப்பட்ட துணை விதிச் சட்டங்கள்) சட்ட விதிகளின் படி கிடைக்கப்பெற்ற அதிகாரத்தின் படி, உள்ளூராட்சி வீடமைப்பு மற்றும் நிர்மாண விடயம் தொடர்பான கௌரவ அமைச்சரால் திட்டவரைவு பிரேரணை செய்யப்பட்ட 1989 ஆம் ஆண்டின் சனவரி மாதம் 20 ஆந் திகதிய இலக்கம் 541/17 என்ற இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் மற்றும் மேல் மாகாணத்தின் மாகாண சபையினால் உறுதி செய்யப்பட்டதென 1991, மே மாதம் 21 ஆந் திகதிய இலக்கம் 663/5 என்ற இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள மாநகர சபையின் நிறைவேற்று துணை விதிச் சட்டங்களின் I பகுதியின் துணை விதிச்சட்டங்கள் மற்றும் II பகுதியில் உள்ளடக்கப்பட்ட,

1A - PG 5835 — 08 (2022/05)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

III ஆவது பகுதி - நிதி உத்தரவு

என்ற துணை விதிச்சட்டங்கள் கொழும்பு மாநகர சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும், அவ்வாறு ஏற்றுக்கொள்ளப்பட்ட III ஆவது பகுதியில் குறிப்பிடப்பட்ட நிதி உத்தரவு நிறைவேற்றப்பட்ட துணை விதிச்சட்டங்கள் கொழும்பு மாநகர சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைபடுத்தப்பட்ட வேண்டுமென்றும் கொழும்பு மாநகர சபை பிரேரிக்கின்றது."

EOG 05 - 0022

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.